## ஒரு அமர்வில் அமர்ந்திருக்கும்போது ஓதவேண்டிய துஆ

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எந்த ஒரு கூட்டத்தினரும் ஓரிடத்தில் அமர்ந்திருந்து அந்த அமர்வில் அல்லாஹ்வைத் தியானிக்காமலும் தங்களுடைய நபியின் மீது ஸலவாத்து சொல்லாமலும் இருப்பார்களோ, அவர்களுக்கு மறுமை நாளன்று வருத்தமும் கைசேதமும் உண்டாகும். அல்லாஹ் நாடினால் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கலாம், அவன் நாடினால் அவர்களை மன்னிக்கவும் செய்யலாம் (திர்மிதி).

இந்த நபிமொழியிலிருந்து ஒரு அமர்விலிருக்கும்போது அல்லாஹ்வை அதிகமாகவே தியானிக்கவேண்டும் மற்றும் இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது ஸலவாத்தும் கட்டாயம் சொல்லவேண்டும் என்பது தெரியவருகின்றது.

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள்: எவர் ஒருவர் ஒரு அமர்வில் அமர்ந்திருந்து அங்கே பெருமளவில் வீணான பேச்சுக்களையெல்லாம் பேசினாலும், அவர் அந்த அமர்விலிருந்து எழுந்திருப்பதற்கு முன்பாக இந்த துஆவை ஓதினாரேயானால், அந்த அமர்வில் எந்த வீணான பேச்சுக்கள் பேசப்பட்டிருந்தாலும் அவை மன்னிக்கப்பட்டுவிடுகின்றன.

سُبْحَانَكَ اللّٰهُم وبحَمْدكَ، أَشْهَدُ أَنْ لاَ إِلٰهَ إِلاَّ أَنْتَ أَسْتَغْفِرُكَ وَأَتُوْبُ إِلَيْكَ

*பொருள்: நீ பரிசுத்தமானவன், எங்கள் இறைவனே, புகழ் அனைத்தும் உனக்கே உரியது. உன்னைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, நான் உன்னிடம் பாவமன்னிப்புக் கோருகிறேன் மற்றும் உன் புறமாகவே திரும்பியும் வருகின்றேன் (திர்மிதி)*

* * *

www.uzairfahi.com